**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**<u>துறையூர்.</u>**

**<u>SC.No.139/2023</u>**

தேதி. 02.04.2026

பெயர் : சதிஸ்வரன் (அ.சா.6)  த/பெ.மகாலிங்கம்

எதிரி ஆஜர்.

<u>சாட்சி மனுவின் மீது மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் தற்போது தென்புறநாடு கிராமத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிகிறேன். 05.07.2022 ம் தேதி நானும் கிராம நிர்வாக அலுவலர் பன்னீர்செல்வமும் பெரியசித்தூரில் ஒரு முள்புதரில் இருந்து போலிஸார் கைப்பற்றிய அருவாளை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அருவாளை தான் போலிஸார் அன்று கைப்பற்றினார். மேற்படி அருவாளை கைப்பற்றிய போது நானும் VAO ம் போலிஸாரும் இருந்தோம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. 05.07.2022 ம் தேதி எத்தனை மணிக்கு எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் 9.45 மணிக்கு கூறினார்கள். சம்பவ இடத்திற்கு நான் போகும்போது 10.30 மணிக்கு டாப்செங்காட்டுப்பட்டிக்கு சென்றோம். அருவாளை கைப்பற்றிய போது 12.00 மணிக்கு மேல் இருக்கும். நான் 10.30 மணிக்கு போகும்போது போலிஸார் செங்காட்டுப்பட்டியில் இருந்தார்கள். அருவாளை கைப்பற்றிய போது உள்ளூர்காரர்கள் அங்கு இருந்தார்களா என்றால் 2, 3 பேர் இருந்தார்கள். உப்பிலியபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அருவாள் கைப்பற்றும்போது இருந்தார். அருவாளை கைப்பற்றிய பிறகு உப்பிலியபுரம் காவல் நிலையத்தில் வந்து கையெழுத்து செய்தோம்.

**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**<u>துறையூர்.</u>**

**<u>SC.No.139/2023</u>**

தேதி. 02.04.2026

பெயர் : பன்னீர்செல்வம் (அ.சா.7)   த/பெ.நேதாஜி

எதிரி ஆஜர்.

**<u>சாட்சி மனுவின் மீது மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தற்போது வண்ணாடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நான் இந்த வழக்கு சமயத்தில் தென்புறநாடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். எதிரியை எனக்கு தெரியும். நான் ஏற்கனவே முதல் விசாரணையில் என் முன்னிலையில் போலிஸார் ஆயுதம் கைப்பற்றியதாக கூறியுள்ளேன், என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அருவாளை தான் போலிஸார் கைப்பற்றினார்களா என்றால் ஆமாம். சா.பொ.1 கைப்பற்றும்போது என்னுடன் கிராம நிர்வாக உதவியாளர் சதிஸ்வரன் இருந்தார். உப்பிலியபுரம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் இருந்தார். ஆஜர் எதிரி தான் கொடுவாளை எடுத்து கொடுத்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு உப்பிலியபுரம் காவல் நிலையத்திலிருந்து காலை 10.00 மணிக்கு தகவல் வந்தது, நான் 11.00 மணிக்கு டாப்செங்காட்டுப்பட்டி மலைக்கு சென்றேன். நான் 11.00 மணிக்கு செல்லும்போது காவல்துறையினர் அங்கு இருந்தனர் என்றால் சரிதான். மேற்படி பொருளை எடுக்கும்போது 12.00 மணி இருக்கும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிஸார் எல்லா தகவல்களும் கூறினார்களா என்றால் ஞாபகமில்லை. வழக்கு சம்பந்தமான விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சம்பவம் எங்கு

நடந்தது என கூறமுடியுமா என்றால் டாப்செங்காட்டுப்பட்டிக்கு பக்கத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றது. எதிரி மீது என்ன வழக்கு என்றால் எதிரிக்கும் அவருடைய மருமகளுக்கும் பிரச்சனை என்பதால் எதிரி மருமகளை அருவாளால் வெட்டிவிட்டார். வேறு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. பொருள் எடுத்த பிறகு மீண்டும் என்னை போலிஸார் விசாரித்தார்களா என்றால் அன்றே நான் வாக்குமூலம் கொடுத்து கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டேன். நான் முதல் விசாரணையில் கைப்பற்றிய பொருளின் பெயரை மாற்றி முன்னுக்கு பின் முரணாக தற்போது சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி தெரியாது என்றால் சரியல்ல. என் முன்பு எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.